[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTION.

ALLEGED IRREGULARITIES IN THE SELECTION OF CANDIDATES FOR THE FIVE-YEAR INTEGRATED M.B. B.S., COURSE.

* SRI A. KUNJAN NADAR : Mr. Speaker, Sir, I have given notice of the following adjournment motion :—

"That the business of the House be adjourned to discuss a definite matter of urgent public importance, namely, the serious situation created in the State by the glaring injustice and naked irregularities done in the recent selection of candidates for admission to the Five-Year Integrated M.B., B.S. Course."

Sir, during the recent selection for the Five-Year Integrated M.B., B.S. course, it is a public scandal that selection was made, solely on the basis of favouritism, nepotism and communalism. Students who got high-ranking marks such as D, D-Plus, A and A-Plus were denied admission, while students who got very poor marks such as C, B and B-Plus secured admission. In fact, I personally know of a few cases where such things have happened.

MR. SPEAKER : The hon. Member can go into details only after the motion is admitted. Now the question is whether this matter has to be taken up as an adjournment motion or not.

SRI A. KUNJAN NADAR : Sir, I may not get an opportunity …………

MR. SPEAKER : That does not mean that the hon. Member can discuss everything as though the adjournment motion has been admitted.

SRI A. KUNJAN NADAR : Sir, this is a matter which will very vitally affect our national progress. If merit is not recognised and rewarded and students with poor marks are given preference in admission, then it will create heart-burning to so many meritorious students who are to form our future generation and who are to build up our nation. This sort of favouritism is practised not only in the selection of candidates for the M.B., B.S. course, but in the case of many other selections which ought to have been done on the basis of merit. There are very bad scandals afloat in the public about the whole affair. I have therefore given notice of this motion with a view to discuss this matter of vital importance and I request that the motion may be allowed.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இது அவசரப் பிரேரணைக்கு உரியதா என்பது தான் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். ஆனால், இதைப் பிரேரேபித்த கனம் உறுப்பினர் அவர்கள், "favouritism, nepotism இதெல்லாம் இருக்கிறது, மருத்துவக் கல்லூரியில் மட்டுமல்ல, வேறு வகையிலும் இருக்கிறது" என்று பொதுவாக, அரசாங்கத்தைக் கண்டிக்கும் வகையிலே எடுத்துக் கூறினார்கள். அரசாங்கத்தைக் கண்டிக்க வேண்டுமென்றால், சந்தர்ப்பங்கள் இல்லாமல்

5th November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

இல்லை. "வேறு சந்தர்ப்பம் இல்லை, அதனால் இதெல்லாம் பேசுகிறேன்" என்று கனம் அங்கத்தினர் சொன்னார்கள். சந்தர்ப்பங்கள் எவ்வளவோ இருக்கின்றன. ஆனால், இது நிர்வாக வகையிலே நடைபெற்றதா, இது அவசரப் பிரேரணைக்கு உகந்ததா என்று தான் நாம் சிந்திக்க வேண்டும். மருத்துவக் கல்லூரியிலோ அல்லது வேறு சில கல்லூரிகளிலோ மாணவ மாணவிகளைச் சேர்த்துக்கொள்ளும் விஷயம் பற்றிச் சில விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக ஒன்று. செலக்ஷன் மாவட்ட ரீதியில் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. பொதுவாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்தால் வேறு வகையில் இருக்கும். ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும், இவ்வளவு என்று இடம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. வேறு சில விதிகளும் இருக்கின்றன. இதற்காக அமைக்கப்பட்டுள்ள குழு எல்லா மாணவர்களையும் நேரில் அழைத்து, நேரில் சந்தித்து, கேள்விகள் எல்லாம் கேட்டு, உடல் நிலையை எல்லாம் பார்த்துத் தேர்ந்தெடுக்கிறார்கள். இந்த முறையையே மாற்றி அமைக்க வேண்டுமென்றால் வேறு சந்தர்ப்பத்தில் இதைப்பற்றிப் பேசிக்கொள்ளலாம். தேர்வு சில மாதங்களுக்கு முன்பே நடந்தது. அதற்குப் பிறகு மேலும் நூறு ஸ்தானங்களுக்குச் சேர்த்துக் கொள்ளலாம் என்று மத்திய அரசாங்கம் அனுமதி கொடுத்தது. மீண்டும் ஒரு குழுவை அமைத்தோ அல்லது பழைய குழுவைக் கொண்டே தேர்வை நடத்தும்படியோ செய்யாமல் வெயிட்டிங் லிஸ்டில் இருக்கக் கூடியவர்களில் முதல் நூறு பேர்களைச் சேர்த்துக் கொள்ளும்படி அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது, பத்து நாட்களுக்கு முன்பாக. இதுதான் நிலை.

மேலும், கனம் எதிர்க்கட்சித் தலைவர் இதுபற்றி ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். அந்தக் கேள்விக்கும் விடை அளிக்கப்படும். அதற்கு மேலே உபகேள்விகளும் கேட்கலாம். ஆகையால் இப்போது இது அவசரப் பிரேரணைக்கு உகந்தது அல்ல என்று நான் கருதுகிறேன்.

MR. SPEAKER: This is not a matter for an adjournment motion. The hon. Leader of the Opposition has given notice of a private notice question which will be taken up shortly. So, I withhold my consent to it.

Sri S. J. Ramaswami has given notice of a matter under Rule 41. But the hon. Member is not present here. So, we may pass on to the next item.

III.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS GENERAL SALES TAX (SECOND AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 20 OF 1965).

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, I beg to present the Report* of the Select Committee on the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1965, and move for leave to withdraw the Bill.

* Printed as Appendix IV on pages 114-115.